**தலைப்பு 204 – இந்து சமய மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இந்து சமய மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தம்பர் 02 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பா் 31 இல் உள்ளவாறான இந்து சமய மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல்,

வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக.

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.1 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புகளின் பிரகாரம், முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

#### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது மற்றும் கடந்த வருடத்தில் ஏனைய கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்காக சேகரிக்கப்பட்ட ரூபா 11,527,362 மற்றும் ரூபா 9,562,994 தொகை திறைசேரியிலிருந்து கிடைத்த கட்டுநிதியாக பதிவு செய்வதற்கு பதிலாக வரியல்லாத வருமானம் மற்றும் ஏனைய பெறுவனவுகளாக பதிவு செய்யப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 7(ii) பந்தி மற்றும் 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 7(ii) பந்தியின் பிரகாரம் செயற்பட வேண்டியமை. | தவறுதலாக் ACA 1 இன் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் திறைசேரியிலிருந்து கிடைத்த கட்டுநிதியாக கருதி பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.6.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் அவதானிக்கப்படுகின்றன.

| **அவதானிப்புகள்** | | | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு** | **இணக்கமின்மை** | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 237 | திணைக்களத்தினால் அறநெறி பாடசாலையின் மாணவர்களுக்கு மற்றும் ஆசிரியர்களுக்கு சீருடைத் துணிகளை கொள்வனவு செய்யும் போது மற்றும் இந்து மக்களுக்கு சமய புத்தகங்கள் மற்றும் அறநெறி பாடசாலை மாணவர்களுக்காக உதவிப் புத்தகங்களை அச்சிடும் போது குறித்த பொருட்கள் கிடைத்தமை தொடர்பில் உறுதிப்படுத்தாது ரூபா 3,304,750 தொகையான கொடுப்பனவுகள் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கொடுப்பனவுகளுக்காக ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ள போதிலும், அந்த கொடுப்பனவுகள் உரிய நபர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1.7 ஆம் பந்தி | வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கைகள் அதற்கடுத்த ஆண்டின் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | அனைத்து பொருட்களுக்குமான பொருள் மெய்மையாய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியமை. | பொருள் மொய்மையாய்வு பணிகள் இறுதிக் கட்டத்தில் உள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எவ்வாறெனினும், 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்குரிய நூலக புத்தகங்களுக்காக பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் 2020 ஆகஸ்ட் 20 ஆந் திகதி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2001 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய 18/2001 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | 5 வருடங்கள் ஒரே ஒரே சேவை நிலையத்தில் சேவையில் சேவையில் உள்ள ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் ஏனைய சேவை நிலையங்களில் சேவையாற்ற இடமளிக்கும் பொருட்டு இடமாற்றங்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும், 5 முதல் 31 வருடங்கள் வரையான காலப்பகுதியினுள் ஒரே இடத்தீல் சேவையாற்றும் அவ்வாறான உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | உத்தியோகத்தர்களுக்காக இடமாற்றங்கள் தொடர்பில் உரிய நடைமுறைகளின் பிரகாரம் வருடாந்தம் ஒன்றிணைந்த சேவைகள் ஆணையாள?ருக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

-----------------------

### 2.1 செலவின முகாமைத்துவம்

--------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| 6 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 4 மூலதன விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் 14 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் சேமிப்புகளின் கூட்டுத்தொகை ரூபா 8,794,576 ஆகும். | நிதிப்பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் நிறைவேற்றப்படும் வகையில வருடாந்த செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியமை. | விரயத்தினை குறைத்தல், தேவைப்பாடு ஏற்படாமை, 2019 ஏப்ரல் மாதத்தில் நாட்டில் ஏற்பட்ட நிலைமை காரணமாக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ள முடியாமை மற்றும் சில அறநெறி ஆசிரியர்களுக்கான படிகளை பெற்றுக்கொள்வதற்காக வங்கிக் கணக்கு விபரங்களை முன்வைக்காமை போன்ற காரணங்களினால் சேமிப்புகள் ஏற்பட்டுள்ளன. |

### 2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்தப்படல்

----------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் (2) (ஈ) இன் பிரகாரம், ஏதேனுமொரு | சேமிப்புகளை விஞ்சி பொறுப்புகள் ஏற்படுத்தப்படக்கூடாது. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | நிதியாண்டிற்குரிய அனைத்து பொறுப்புகளும் அந்த வருடத்தில் பணம் செலுத்தி விடுவிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் போது 2 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளில் எஞ்சியிருந்த ரூபா 86,935 இனை விஞ்சி ரூபா 405,823 ஆன பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | 2019 திசெம்பர் 3 ஆந் திகதி 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தியின் பிகாராரம், நான்கு செலவின விடயங்களுக்க உரியதாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 833,256 தொகை திறைசேரியின் பதிவேடுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், மூன்று செலவின விடயங்களுக்கு உரியதாக 2020 ஆம் ஆண்டின் போது தீர்ப்பனவு செய்யப்பட்ட ரூபா 386,395 தொகை நிதிக்கூற்றுக்களில் அல்லது திறைசேரியின் பதிவேடுகளிலோ வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் திறைசேரி பதிவேடுகளுடன் இணங்க வேண்டியமையால் இணக்கம் செய்தல் இடம்பெற வேண்டும் என்பது. | தவறுதலாக ரூபா 386,395 ஆன நிதி பொறுப்புகளாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எனினும், அனைத்து செலவினங்களும் கடந்த வருடத்தின் நிதியேற்பாட்டு எல்லைகளில் செலவிடப்பட்டுள்ளன. |

**2.3 முற்பணக் கணக்கு மீதிகள்**

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|---|
| (அ) | இடமாற்றம் பெற்றுச்சென்ற 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 46,462 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் 28 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்படுவதுடன், அந்த கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதிகளை துரிதமாக தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கடன் தொகைகளை அறவிடும் போது சிக்கலான நிலைமையொன்று உருவாகியுள்ளதுடன், அந்த கடன் மீதிகளை பதிவளிப்பதற்கான கோரிக்கைகள் பொது திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) | சேவையை விட்டுச்சென்ற 03 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய சுமார் 19 முதல் 25 வருட காலங்களுக்கு இடைப்பட்ட காலமாக முன்கொண்டுவரப்படும் ரூபா 40,469 தொகையான கடன் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதிகளை துரதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடன் தொகைகளை அறவிடும் போது சிக்கலுக்குரிய நிலைமையொன்று உருவாகியுள்ளமையால் அந்த கடன் மீதிகளை பதிவழிப்பதற்கான கோரிக்கைகள் திறைசேரியில் முன்வைக்கப்பட்டுள்ளது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2002 செப்தம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு நிறைவடைந்து 150 நாட்களினுள் ஆண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்குரிய செயலாற்றல் அறிக்கை 2020 ஆகஸ்ட் 20 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான செயலாற்றல் அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு துரதமான நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகின்றேன். |

**3.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2008 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வுகளின் மூலம் இனங்காணப்பட்டிருந்ததுடன், பெறுமதி உறுதிப்படுத்த முடியாத சிதிலமடைந்த 350 வாசிகசாலை புத்தகங்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 101 மற்றும் 102 இன் பிரகாரம் விசாரணைகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தி பராமரித்தல் மற்றம் அகற்றும் பணிகள் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டியமை. | புத்தகங்கள் அரச நிதியினை பயன்படுத்தி அச்சிடப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய இதற்குரிய நிதிப்பிரமாணம் 101 மற்றும் 102 இன் பிரகாரம் விசாரணைகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குரிய அறிவுரைகள் பெற்றுக்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். |